1992 ஏப்ரல் 21]

உள்ள வாக்கு சாவடிகளுக்கு நல்ல சாலை வழியாகச் சென்றால் 5 கிலோ மீட்டருக்கு மேல் நடக்க வேண்டியிருக்கிறது. ஆனால் குறுக்குவழியில் சென்றால் 2 கிலோ மீட்டர் தூரம் தான் நடக்க வேண்டும். பொதுவாக பூப்பாண்டியபுரம் கிராம மக்கள் மூக்கையூர் செல்ல இந்த குறுக்கு வழியையே பின்பற்றுகிறார்கள். பூப்பாண்டியபுரத்தில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 232 தான். புதியதாக தனி வாக்குச் சாவடிகள் அமைக்கும்போது வாக்காளர்களின் எண்ணிக்கையும் கணக்கில் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த கிராமத்து வாக்காளர்களிடமிருந்து தங்களுக்கு தனி வாக்குச் சாவடி அமைத்துத்தர வேண்டும் என்ற விண்ணப்பம் ஏதும் இதுவரையில் பெறப்படவில்லை. மேலும். வாக்காளர் பட்டியலை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தீவிர முறையில் திருத்தப்பட்டு புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. 1993-ல் தீவிர முறையில் வாக்காளர் பட்டியல் திருத்தப்படலாம். அவ்வாறு வாக்காளர் பட்டியல் தீவிர முறையில் திருத்தப்படும்போது வாக்கு சாவடிகளில் இணைக்கப்பட உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருந்தால், வாக்கு சாவடிகளை மாற்றி அமைக்கவும் பிற காரணங்களுக்காக வாக்குசாவடிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு அதற்கு ஏற்ப வாக்காளர் பட்டியலும் தயாரித்து அச்சடிக்கப்படும். அப்போது வேண்டுமானால் பூப்பாண்டியபுரம் வாக்காளர்களின் வசதிக்காக அவர்களை வேறு வாக்கு சாவடிகளோடு இணைக்க முடியுமா அல்லது பூப்பாண்டியபுரத்தில் போதுமான அளவுக்கு வாக்காளர்கள் இருந்து அங்கேயே அமைக்க முடியுமா என்பதைப்பற்றி ஆராயலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 571 திரு. வி. பி. சந்திரசேகர்; மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

571—

நீதி மன்றங்களை ஒரே இடத்தில் அமைத்தல்

*3903—திரு. வி. பி. சந்திரசேகர்:

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பொள்ளாச்சி நகரில் பல இடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களை ஒரே இடத்தில் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி நகரில் அமைந்துள்ள நீதிமன்றங்களை ஒரே இடத்தில் அமைக்கும் கருத்து அரசின் பரிசீலனையில்இல்லை.

முற்பகல் 9-35

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி நகரிலே அமைந்திருக்கின்ற நீதிமன்றங்கள் நகரின் பல்வேறு பகுதிகளிலே பிரிந்து இருக்கின்ற காரணத்தினாலே வழக்குக்காக வருகின்ற மக்களுக்கும் வழக்காடுகின்ற வழக்கறிஞர்களுக்கும் நடைமுறைச் சிக்கல் ஏற்படுகிறது. அதற்குத் தான் ஒரே இடத்தில் நீதிமன்றங்கள் இருக்க வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசிடம் இந்த நீதிமன்றங்களை எல்லாம் ஒருங்கிணைப்பதற்கு வேறு ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியைப் பொறுத்த வரையில் 4 நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஒன்று டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட், இரண்டாவது 3 ஜூடிஷியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்ஸ் இன்று உயர் நீதிமன்றம் அரசுக்கு ஒரு பரிந்துரை அனுப்பியிருக்கிறது. வேண்டுமானால் ஜூடிஷியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு மேல் முதல் தளத்தில் இடம் இருக்கிறது. அதில் ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டி டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் அமைத்துக் கொள்ளலாம் அதற்கு டிசைன் இதோ என்றும், அதற்கு 11,15,000 ரூபாய் அனுமதித்திருக்கிறோம் என்றும் உயர் நீதிமன்றம் தமிழக அரசுக்கு அனுப்பியிருக்கிறது. விரைவில் அந்த முடிவின் அடிப்படையில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை ஜூடிஷியல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட் வளாகத்திலேயே அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி.பி. சந்திரசேகர் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நீதிமன்றங்கள் வெளியே இருக்கின்ற காரணத்தினாலே வெளியாருடைய கட்டிடங்களிலே வாடகைக்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்களை காலிசெய்யச் சொல்லி அந்த வீட்டின் உரிமையாளர் இன்றைக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த இடைக் காலத்திலே இந்த நீதிமன்றங்கள் இருக்கின்ற இடத்திலே அரசினுடைய வளாகத்திலே அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் காலியாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக்

1992 ஏப்ரல் 21]

கட்டிடங்களிலே தற்காலிகமாக அந்த நீதிமன்றங்கள் நடைபெற அரசு முன்னுரிமை அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அளித்த தகவலின்படி அது உசிதமா என்று அரசு ஆலோசனை செய்து அதற்கு தகுந்தபடி நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 572, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

572—

கல்வியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை.

*** 2433—திரு. க. அர்ச்சுனன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தரம் தாழ்ந்துள்ளதற்கு பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் காரணமா என்பதை அரசு ஆய்வு செய்யுமா?

(ஆ) கல்வியின் தரத்தை உயர்த்த பறக்கும் படை அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு இதை ஆய்வு செய்யும்.

(ஆ) ஏ.ஈ.ஓ., டி.ஐ. ஆகியோருக்கு ஆண்டுக்கு மூன்று முறை திடீரென பார்வையிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை கண்காணிக்கும் பள்ளி துணை ஆய்வாளர்கள், உதவி கல்வி அலுவலர்கள் ஆகியோர்களுக்கு தற்போது தவறு செய்யும் ஆசிரியர் மீது மேற்பார்வையிட மட்டும்தான் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் இல்லை. டி. ஈ. ஓ. வுக்கு மட்டுமே அதிகாரம் இருப்பதால் கட்டுப்பாடின்றி சில ஆசிரியர்கள் தங்கள் இஷ்டத்திற்கு செயல்படுகிறார்கள். எனவே தவறு செய்பவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த உதவி கல்வி அலுவலர்